**செய்தி வெளியீடு எண்:005** **நாள் :03.01.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **28.12.2015** அன்று தலைமைச் செயலகத்தில், பெல்ஜியம் நாட்டில் **18.10.2015** அன்று நடைபெற்ற உலக அளவிலான **18**வது பிளமிஸ் ஓபன் வாள்வீச்சுப் போட்டியில் ($18^{th}$ Flemish Open Fencing Championship) வெண்கலப் பதக்கம் வென்ற வாள்வீச்சு வீராங்கனை செல்வி சி.ஏ. பவானி தேவிக்கு ஊக்கத்தொகையாக **2** லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகைசூட ஏதுவாக, தமிழகத்தைச் சேர்ந்த திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல், சர்வதேச போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெறும் வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த வாள்வீச்சு வீராங்கனை செல்வி சி.ஏ. பவானி தேவி, **2014–**ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற ஆசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கமும், **2015–**ஆம் ஆண்டு மங்கோலியாவில் நடைபெற்ற வாள்வீச்சுப் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளார். இதுமட்டுமின்றி காமன்வெல்த் ஜூனியர் வாள்வீச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களையும் வென்றுள்ளார். செல்வி சி.ஏ. பவானி தேவி **2015–**ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெனிசுவேலா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற வாள்வீச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ள நிதியுதவி வழங்கிட வேண்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை

வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள்.

பெல்ஜியம் நாட்டில் 18.10.2015 அன்று நடைபெற்ற உலக அளவிலான 18வது பிளமிஸ் ஒபன் வாள்வீச்சுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.10.2015 அன்று செல்வி பவானி தேவியை பாராட்டி கடிதம் எழுதியதோடு, தமிழக அரசின் சார்பில் 2 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

அதன்படி, பெல்ஜியம் நாட்டில் நடைபெற்ற உலக அளவிலான 18வது பிளமிஸ் ஒபன் வாள்வீச்சுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வாள்வீச்சு வீராங்கனை செல்வி சி.ஏ. பவானி தேவிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.12.2015 அன்று தலைமைச் செயலகத்தில், ஊக்கத்தொகையாக 2 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஊக்கத்தொகைக்கான காசோலையை பெற்றுக் கொண்ட செல்வி பவானி தேவி, தன்னை பாராட்டி, ஊக்கத்தொகை வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வின்போது, செல்வி பவானி தேவியின் பெற்றோர் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள் : 3.1.2016